# 05 அதிபர் அலுவலகத்திலே



அன்சார் மாத்தளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன். சரத் குருநாகல் மகா வித்தியாலய மாணவன். மாகாண மட்டத் தமிழ்மொழித் தினப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இருவரும் களுத்துறைத் தேசிய பாடசாலைக்குச் சமுகம் அளித்துள்ளனர். அவர்கள் தமது பெயர்களைப் போட்டிகளுக்காகப் பதிவு செய்வதற்கு அதிபர் அலுவலகத்திற்குச் செல்லவேண்டி ஏற்படுகின்றது. கல்லூரிப் பிரதான வாயிலில் அவர்கள் தமக்குள் அறிமுகம் ஆகின்றனர்.

சரத் : வணக்கம்! நான் சரத். நீங்கள்.....?

அன்சார் : வணக்கம்! எனது பெயர் அன்சார்.

சரத் : நான் குருநாகல் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்தவன். தமிழ்மொழித் தினப் போட்டிக்கு வந்துள்ளேன். நீங்கள்......?

அன்சார் : நானும் தமிழ்மொழித் தினப் போட்டிக்காகவே வந்துள்ளேன். பெயர்களை அதிபர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்து விட்டீர்களா?

சரத் : இன்னும் இல்லை. அதிபர் அலுவலகம் எங்கே இருக்கின்றது என்று தெரியவில்லையே!

அன்சார் : அதோ! அதிபர் அலுவலகம் அங்கே இருக்கின்றது. வாருங்கள், போவோம் (இருவரும் அலுவலகத்தை நோக்கிச் செல்கின்றனர்.)

சரத் : தொலைபேசியில் ஒருவர் கதைக்கின்றார். அவர் அதிபராக இருக்கலாம்.

அன்சார் : அதிபரின் மேசையில் புதிய வகை கணினியும் அச்சுப்பொறியும் இருக்கின்றனவே!

இருவரும் : சேர்! உள்ளே வரலாமா?

அதிபர் : உள்ளே வாருங்கள்.

இருவரும் : வணக்கம் சேர்.

அதிபர் : வணக்கம். என்ன விடயம்?

சரத் : நாங்கள் தமிழ் மொழித் தினப் போட்டிக்காக வந்துள்ளோம், சேர்.

அதிபர் : இந்தக் கதிரைகளில் அமருங்கள்.

இருவரும் : நன்றி சேர்.
(அழைப்பு மணி அடிக்கப்படுகின்றது.)

காரியாலய
உதவியாளர்: என்ன சேர்?

அதிபர் : தமிழ் மொழித் தினப் பொறுப்பாசிரியரை வரச் சொல்லுங்கள். (தமிழ்மொழிப் பொறுப்பாசிரியர் வருகின்றார்.)

பொறுப்பா
சிரியர் : வணக்கம் சேர்.

அதிபர் : வணக்கம், வாருங்கள். இவர்கள் தமிழ் மொழித் தினப் போட்டிக்காக வந்துள்ளார்கள். தேவையானதைக் கவனியுங்கள்.

பொறுப்பா
சிரியர் : (அதிபர் அலுவலக மணிக்கூட்டை அவதானித்து) இப்பொழுது ஒன்பது மணி ஆகின்றதே!

இருவரும் : ஆம், ஒன்பது மணி சேர்.

பொறுப்பா : (அலுமாரியைத் திறந்து கோவையை எடுத்து)
சிரியர் இந்தாருங்கள், நிகழ்ச்சி நிரல்.

இருவரும் : நன்றி சேர்.


போட்டிகள் சரியாகப் பத்துமணிக்கு ஆரம்பிக்கப்படும் என அதிபர் அலுவலக ஒலி பெருக்கியில் அறிவிக்கப்படுகிறது . இதனால் போட்டி நிகழ்ச்சிக்காக இரண்டு பேரும் அதிபர் அலுவலகத்திலிருந்து செல்கின்றனர்.

**காலம் பொன்னானது.**
**කාලය රත්තරන් වේ.**

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| பதிவு செய்தல் | - | ලියාපදිංචි කිරීම |
| மாகாணம் | - | පළාත |
| போட்டி | - | තරග |
| பிரதானவாயில் | - | ප්‍රධාන ගේට්ටුව |
| அதிபர் | - | විදුහල්පති |
| அலுமாரி | - | අල්මාරිය |
| ஒலிபெருக்கி | - | ශබ්ද විකාශය |
| கோவை | - | ගොනුව |
| தொலைபேசி | - | දුරකථනය |
| வணக்கம் | - | ආයුබෝවන් |
| விடயப் பொறுப்பாசிரியர் | - | විෂය භාර ගුරුවරයා |


| பேச்சுமொழி<br>**කථන භාෂාව** | | எழுத்துமொழி<br>**ලිඛිත භාෂාව** |
|---|---|---|
| சேர் | - | ஐயா |
| தெரியேல்லை | - | தெரியவில்லை |
| இருக்கிறது | - | இருக்கின்றது |
| இருக்கலாம் | - | இருக்கும் |
| ஆகிறது | - | ஆகின்றது |



## செயற்பாடு 01

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත සඳහන් ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. தமிழ்மொழித் தினப் போட்டி நிகழ்ச்சி எங்கே இடம் பெற்றது?
2. போட்டி நிகழ்ச்சிக்காகச் சென்றவர்கள் யாவர்?
3. சரத் எக்கல்லூரியைச் சேர்ந்தவன்?
4. அதிபர் அலுவலகத்தில் காணப்பட்ட ஐந்து பொருட்களைத் தருக.
5. எத்தனை மணிக்குப் போட்டி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன?




## செயற்பாடு 02

**அ. இணைப்போம்**

**යා කරමු.**

| | |
|---|---|
| அலுவலகம் | පරිගණකය |
| மணிக்கூடு | අල්මාරිය |
| கணினி | කාර්යාලය |
| கதிரை | දුරකථනය |
| தொலைபேசி | ඔරලෝසුව |
| அலுமாரி | පුටුව |




## செயற்பாடு 03


**படத்தைப் பார்த்துத் தமிழில் எழுதுவோம்.**
**පින්තූර බලා දෙමළෙන් ලියමු.**





............................................... ...............................................






............................................... ...............................................





............................................... ...............................................




## செயற்பாடு 04

**அதிபர் அலுவலகத்தில் உள்ள பொருட்களை அட்டவணைப் படுத்துவோம்.**
**විදුහල්පතිතුමාගේ කාර්යාලයේ තිබෙන භාණ්ඩවල නම් ලියමු.**

| | |
|---|---|
| 1. ............................................. | 2. ............................................. |
| 3. ............................................. | 4. ............................................. |
| 5. ............................................. | 6. ............................................. |
| 7. ............................................. | 8. ............................................. |
| 9. ............................................. | 10. ............................................. |

**இலக்கங்களை வாசிப்போம்.**
**ඉලක්කම් කියවමු.**

| | |
|---|---|
| 01. ஒன்று | 11. பதினொன்று |
| 02. இரண்டு | 12. பன்னிரெண்டு |
| 03. மூன்று | 13. பதின்மூன்று |
| 04. நான்கு | 14. பதினான்கு |
| 05. ஐந்து | 15. பதினைந்து |
| 06. ஆறு | 16. பதினாறு |
| 07. ஏழு | 17. பதினேழு |
| 08. எட்டு | 18. பதினெட்டு |
| 09. ஒன்பது | 19. பத்தொன்பது |
| 10. பத்து | 20. இருபது |




## செயற்பாடு 05

**ஒற்றை எண்களை எழுத்தில் எழுதுவோம்.**
**ඔත්තේ ඉලක්කම් අකුරෙන් ලියමු.**

1. 1 ....................................  2. 17 ..........................................

3. 13 ..................................  4. 11 ..........................................

5. 19 ....................................  6. 9 ............................................




## செயற்பாடு 06

**இரட்டை எண்களை எழுத்தில் எழுதுவோம்.**
**ඉරට්ටේ ඉලක්කම් අකුරෙන් ලියමු.**

1. 2 .......................................  2. 18 ....................................

3. 10 ....................................  4. 20 ........................................

5. 16 ....................................



## செயற்பாடு 07


**பொருத்தமான சொல்லைச் சேர்த்துப் பின்வருவனவற்றை வாக்கியமாக எழுதி வாசிப்போம்.**
**කැමති සංඛ්‍යාවක් යොදා පහත සඳහන් වාක්‍ය සාදන්න.**

போதும் - எனக்கு இரண்டு போதும்.

போதாது - ..................................................................

வேணும் - ..................................................................

வேணாம் - ..................................................................



## செயற்பாடு 08

**பின்வரும் தலைப்புக்களில் ஐந்து வாக்கியங்களை அமைத்துப் பேசிப்பழகுவோம்.**
**පහත සඳහන් මාතෘකා යටතේ වාක්‍ය 05 ක් සාදා ඒවා කියවමු.**

1. எனது பாடசாலை
2. எனது ஆசிரியர்
3. விளையாட்டுப்போட்டி
4. வீட்டுத்தோட்டம்

## நேரத்தைக் கூறுவோம்.
## වේලාව හඳුනාගනිමු.

| | | |
|---|---|---|
| மணி | - | පැය |
| நிமிடம் | - | මිනිත්තුව / විනාඩිය |
| விநாடி | - | තත්පරය |
| முற்பகல் | - | පෙරවරු |
| பிற்பகல் | - | පස්වරු |
| ஒன்றே கால் மணி | - | එකයි කාල |
| ஒன்றரை மணி | - | එකහමාර |
| ஒன்றே முக்கால் மணி | - | එකයි හතළිස්පහයි |
| இரண்டு மணி ஐந்து நிமிடம் | - | දෙකයි පහ |
| இரண்டு மணி இருபது நிமிடம் | - | දෙකයි විස්ස |







## செயற்பாடு 09

**படம் காட்டும் நேரத்தை எழுதுவோம்.**
**පින්තූරය පෙන්වන වේලාව ලියන්න.**



............................................



............................................



............................................



............................................




............................................



............................................

| பேச்சு மொழி<br>**කථන භාෂාව** | எழுத்து மொழி<br>**ලිඛිත භාෂාව** |
|---|---|
| 1. இப்ப நேரம் என்ன? | இப்பொழுது நேரம் என்ன? |
| 2. இப்ப பத்து மணி. | இப்பொழுது பத்து மணி. |
| 3. நாலு மணிக்கு வாறேன். | நான்கு மணிக்கு வருகின்றேன். |
| 4. நேரம் போயிட்டா? | நேரம் சென்றுவிட்டதா? |
| 5. நேரத்துக்கு வாறியா? | நேரத்துக்கு வருகின்றாயா? |



**செயற்பாடு 10**

**மேலுள்ள எழுத்து மொழியைச் சிங்களத்தில் எழுதுவோம்.**
**ඉහත ලිඛිත භාෂාව සිංහලෙන් ලියමු.**

1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................
4. ..........................................................................................................
5. ..........................................................................................................